


# Palm craft stall opening

**April 26**

# 2023

Dr.A. ArunThamburaj, District collector, Nagapattinam has approved Palm Craft stall to “She in He” transgender Self Help Group, Selllur, Nagapattinam. He has extended a seed fund of Rs.25,000/- to the SHG as an initial investment to the stall.

# SHOP OPENING INVITATION

"அவனுள் அவள்"

திருநங்கையர் சுய உதவி குழு நிர்வகிக்கும்

தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின்

## "பாம்கிராப்ட்" விற்பனை மையம் திறப்பு விழா

**மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம்**

**கடை திறப்பு - டாக்டர். A. அருண்தம்புராஜ் இ.ஆ.ப,**
**மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டிணம்**

நாள் 26.04.23

**முன்னிலை**

காலை 9 மணி

- **திருமிகு.வே. பிரான்சிஸ் தெரசா மேரி, உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில்கள், தஞ்சாவூர்**
- **பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், நாகப்பட்டிணம்**
- **மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் மற்றும்**
- **அனைத்து துறை அலுவலர்கள்**

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஒருங்கிணைப்பு

கோரோட் அறக்கட்டளை, தமிழ்நாடு - http://linktr.ee/coroat

-9443685327

# SHOP OPENING PHOTOS







# NEWSPAPER CLIPINGS



தினகரன்

•27.4.2023 • Thursday • Trichy • Dinakaran 15

பட்டினம்/மயிலாடுதுறை

செயலிழந்து போன பிரெஞ்சு இந்திய வடிகால்கள் பக்கம் 16

பூம்புகார் சுற்றுலாதலம் மேம்படுத்தும் பணி பக்கம் 17

## திருநங்கைகள் வாழ்வில் மேம்பட வேண்டும்

**கலெக்டர் பேச்சு**

நாகப்பட்டினம்,ஏப்.27: திருநங்கைகள் வாழ்வில் மேம்பாடு அடைய வேண்டும் என கலெக்டர் அருண்தம்புராஜ் கூறினார்.

திருநங்கைகள் வாழ்வில் மேம்பாடு அடைவதற்காக தமிழ்நாடு அரசு அவனுள் அவள் என்ற திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது இந்த திட்டத்தின கீழ் திருநங்கைகளுக்கு தொழில் பயிற்சி வழங்கப்பட்டு தொழில்கள் தொடங்க வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி நாகப்பட்டினம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் பனைப்பொருள்கள் விற்பனை நிலையத்தை கலெக்டர் அருண்தம்புராஜ் நேற்று தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழ்நாடு அரசு திருநங்கைகள் வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது இதன்படி அவனுள் அவள் என்ற திட்டத்தை முதல்வர் அறிவித்துள்ளார். இதன்படி திருநங்கைகள் மற்றவர்களை நம்பி இருக்காமல் சுயமாக வாழ்வதற்காக தொழில் தொடங்க பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு பயிற்சி பெற்ற திருநங்கைகள் சுயமாக தொழில் தொடங்க மானியத்துடன் வங்கி கடன் வழங்கப்படுகிறது இதை கொண்டு தொழில்கள் தொடங்கி வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும். இதன்படி நாகப்பட்டினம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் சார்பில் தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் சார்பில் ஸ்டால் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் பனைபொருட்கள் சார்ந்த பாக்கெட் பதநீர், கருப்பட்டி, பனங்கற்கண்டு, பனங்கற்கண்டு மிட்டாய், சில்லுகருப்பட்டி, பனம்பழச்சாறு, பனை ஓலையில் உருவாக்கப்பட்ட கூடைகள், பெட்டிகள், சுக்கு காபித்தூள் மற்றும் காதி கிராட்டின் கைவினை பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பனைப்பொருட்களை மக்களிடம் கொண்டு சென்று சந்தைப்படுத்தப்படுவதுடன், திருநங்கைகளின் வாழ்வும் மேம்பாடு அடையும். தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி தந்துள்ள இந்த வாய்ப்பை திருநங்கைகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதே போல் பிற திருநங்கைகளும் மற்றவர்களை சார்ந்து வாழாமல் இது போன்ற கௌரவமான பணியில் ஈடுபட தமிழ்நாடு அரசு உறுதுணையாக இருக்கும் என்றார்.

▸ தமிழ்நாடு அரசின் அவனுள் அவள் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் திருநங்கைகள் வாழ்வில் மேம்பாடு அடைய பனையால் தயார் செய்யப்படும் பொருட்கள் விற்பனை நிலையத்தை கலெக்டர் அருண்தம்புராஜ் தொடங்கி வைத்தார்.

# நாகை ஆட்சியர் அலுவலகத்தில் பனைப் பொருள்கள் விற்பனை நிலையம் திறப்பு



நாகையில் பனைப்பொருள்கள் விற்பனை நிலையத்தை திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைக்கிறார் ஆட்சியர் அ. அருண் தம்புராஜ்.

**நாகப்பட்டினம், ஏப். 27:** நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பனைப் பொருள்கள் விற்பனை நிலையத்தை மாவட்ட ஆட்சியர் அ. அருண் தம்புராஜ் புதன்கிழமை திறந்துவைத்தார்.

ஆட்சியர் அலுவலகத்தில் காதி கிராப்ட் நிறுவனம் சார்பில், அவனுள் அவள் திருநங்கையருக்கான வாழ்வாதார மேம்பாட்டு திட்டத்தின்கீழ் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பனைப் பொருள்கள் விற்பனை நிலையத்தை ஆட்சியர் அ. அருண் தம்புராஜ் திறந்து வைத்தார். திருநங்கையர் சுய உதவி குழு உறுப்பினர் வி. மாசிகா என்கிற திருநங்கை நிர்வகிக்கும் இந்த அங்காடியில் கருப்பட்டி காபி. கருப்பட்டி டீ, சுக்கு காபி, பழ ஜூஸ், கரும்பு சாறு போன்றவை விற்பனை செய்யப்படுகிறது. இந்த விற்பனை நிலையத்துக்கு மாவட்ட ஆட்சியரின் தன்விருப்ப நிதியில் இருந்து ரூ. 25,000 வழங்கப்பட்டுள்ளது என ஆட்சியர் அ. அருண் தம்புராஜ் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சு. ராமன், காதி கிராப்ட் நிறுவன உதவி இயக்குநர் பிரான்சிஸ் தெரசா மேரி, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ஆர். ரமணி, மாவட்ட சமூக நல அலுவலர் ஆர். அம்பிகா கோரோட் அறக்கட்டளை நிர்வாகி எம். பத்மாவதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# நாகை ஆட்சியர் அலுவலகத்தில் பனைப் பொருள்கள் விற்பனை நிலையம் திறப்பு

By DIN | Published On : 28th April 2023 02:58 AM | Last Updated : 28th April 2023 02:58 AM



நாகையில் பனைப்பொருள்கள் விற்பனை நிலையத்தை திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைக்கிறார் ஆட்சியர் அ. அருண் தம்புராஜ்.

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பனைப் பொருள்கள் விற்பனை நிலையத்தை மாவட்ட ஆட்சியர் அ. அருண் தம்புராஜ் புதன்கிழமை திறந்துவைத்தார்.

ஆட்சியர் அலுவலகத்தில் காதி கிராப்ட் நிறுவனம் சார்பில், அவனுள் அவள் திருநங்கையருக்கான வாழ்வாதார மேம்பாட்டு திட்டத்தின்கீழ் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பனைப் பொருள்கள் விற்பனை நிலையத்தை ஆட்சியர் அ. அருண் தம்புராஜ் திறந்து வைத்தார். திருநங்கையர் சுய உதவி குழு உறுப்பினர் வி. மாசிகா என்கிற திருநங்கை நிர்வகிக்கும் இந்த அங்காடியில் கருப்பட்டி காபி, கருப்பட்டி டீ, சுக்கு காபி, பழ ஜூஸ், கரும்பு சாறு போன்றவை விற்பனை செய்யப்படுகிறது. இந்த விற்பனை நிலையத்துக்கு மாவட்ட ஆட்சியரின் தன்விருப்ப நிதியில் இருந்து ரூ. 25,000 வழங்கப்பட்டுள்ளது என ஆட்சியர் அ. அருண் தம்புராஜ் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சு. ராமன், காதி கிராப்ட் நிறுவன உதவி இயக்குநர் பிரான்சிஸ் தெரசா மேரி, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ஆர். ரமணி, மாவட்ட சமூக நல அலுவலர் ஆர். அம்பிகா கோரோட் அறக்கட்டளை நிர்வாகி எம். பத்மாவதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மேலும் இப்பிரிவில்

அதிகம் படிக்கப்பட்டவை | அதிக பகிரப்பட்

1 நடிகை கஸ்தூரி கேள்விக்கு ஏ.ஆர். ரஹ்மான்!
2 தமிழ்த்தாய் வாழ்த்து விவ... ஈஸ்வரப்பா சுட்டிக் காட்டின... விளக்கம்
3 தமிழ்த்தாய் வாழ்த்தை இ... அமைப்பாளர்கள் மன்னிப்... ராமதாஸ்
4 சனிப்பெயர்ச்சி யாருக்கு ... சொல்கிறார் ஜோதிடர்?
5 குருப்பெயர்ச்சியால் நன்... எவை?
6 பாஜக பிரமுகர் கொலை: ... ஒழுங்கு கட்டுப்பாட்டிலே இ... அண்ணாமலை குற்றச்சாட்டு
7 முதுமலையில் வளர்ப்பு ... பலி!
8 பள்ளிகள் திறப்பு எப்போ... ஆலோசனை!
9 சாலை விபத்து: அன்பால...
10 தமிழ்த்தாய் வாழ்த்தை இ... கட்சிக்காரர்களைத் தடுக்க... கனிமொழி கண்டனம்

Hair Transplantation Surgery Can Be Cheaper Than You...
India: Why Everyone Is Excited Over This Rs.1999 Smartwatch
ई से जुड़े तथ्य जिनके बारे में आपको किसी ने नहीं बताया होगा
mgid
...heaper Than You...
...ia: Why Everyone Excited Over This 1999 Smartwatch
...ी जुड़े तथ्य जिनके बारे आपको किसी ने नहीं बताया होगा
mgid
India: Why Everyone I... This Rs.1999 Sm...